# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2372/03 - 2024 පෙබරවාරි මස 19 වැනි සඳුදා - 2024.02.19

*2372/03 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நலன்புரி நன்மைகள் சட்டம்***

*2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 09 ஆம் பிரிவுக்கு அமைவாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகிய நான் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அஸ்வெசும நலன்புரி நன்மை வழங்கல் நிகழ்ச்சித் திட்டமானது 2024, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து செயற்படுத்தப்படும் என பிரகடனம் செய்கிறேன்.*

**ரணில் விக்ரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2024, பெப்புருவரி 16.*


1A - PG 6651 — 379 (2024/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## I ஆவது அட்டவணை

### அஸ்வெசும நலன்புரி நன்மை கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம்

| நலன்புரி நன்மை கொடுப்பனவினைப் பெறுகின்ற சமூகப் பிரிவினர் | | | நலன்புரி பயனாளிகள்/ குடும்பங்களின் எண்ணிக்கை | குடும்ப அலகு ஒன்றுக்கு முன்மொழியப்பட்ட மாதாந்த நலன்புரி உதவுத்தொகை (ரூபா) * |
|---|---|---|---|---|
| (i) | நிலைமாறல் நிலையிலுள்ள/ ஆபத்திற்குட்பட்ட | 2024.01.01 இலிருந்து2024.06.30 வரை | 800,000 | 5,000 |
| | | 2024.07.01 இலிருந்து2024.12.31 வரை | 960,000 | |
| (ii) | வறிய | 2024.01.01 இலிருந்து 2024.06.30 வரை | 800,000 | 8,500 |
| | | 2024.07.01 இலிருந்து 2026.06.30 வரை | 960,000 | |
| (iii) | மிகவும் வறிய | 2024.01.01 இலிருந்து 2024.06.30 வரை | 400,000 | 15,000 |
| | | 2024.07.01 இலிருந்து 2026.06.30 வரை | 480,000 | |

* குறிப்பு - குடும்பக் கணக்கீடுகளைப் பொறுத்து இந்த மதிப்பீட்டுப் பெறுமதிகள் சற்று மாறுபடலாம்.

** குறிப்பு - குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை 02 அல்லது 02 இற்கு குறைவாக இருந்தால், பயனாளிகளுக்கு உரிய கொடுப்பனவில் பாதி மட்டுமே வழங்கப்படும்.

## II ஆவது அட்டவணை

### மாற்றுத் திறனாளிகள், கண்டறியப்படாத சிறுநீரக நோயாளிகள், முதியோர் உதவுத்தொகை பெறுநர்களுக்கான கொடுப்பனவுகள்

| நலன்புரி நன்மை கொடுப்பனவினைப் பெறுகின்ற சமூகப் பிரிவினர் (1) | | நன்மைகளைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படும் நபர்களின் எண்ணிக்கை (2) | மாதாந்த நலன்புரி நன்மை உதவித்தொகை (ரூபா) (3) |
|---|---|---|---|
| (i) | மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி பெறுகின்றவர்கள் | 410,000 | 7,500 |
| (ii) | சிறுநீரக உதவி பெறுகின்றவர்கள் | 50,000 | 7,500 |
| (iii) | முதியோருக்கான உதவி பெறுகின்றவர்கள் | 820,000 | 3,000 |

** குறிப்பு - II ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் 2024.04.01 முதல் 2025.03.31 வரை செலுத்தப்படல் வேண்டும். நலன்புரி நன்மைகள் பதிவேட்டின் மூலம் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளுக்கு 2024.04.01 முதல் அஸ்வெசும நலன்புரி நன்மை நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நன்மைகள் வழங்கப்பட வேண்டும்.

2023, ஏப்பிறல் 21 ஆந் திகதிய 2328/13 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அஸ்வெசும கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம் இத்தால் செய்யப்படும் அதேவேளை, நலன்புரி நன்மைக் கொடுப்பனவுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகள் மற்றும் பல்வேறு காரணங்களால் பணம் வழங்குவதில் காலதாமதம் ஏற்படும் பயனாளிகளுக்கும், ஆனால் அதன் அட்டவணை I தொடர்பாக, ஏற்கனவே பலன்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகள் மற்றும் பல்வேறு காரணங்களால் பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டவர்கள், மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்து ஏற்கனவே பரிசீலனைக்கு உட்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு, அவர்களின் தகுதியைப் பொறுத்து, 2023.12.31 வரையில் குறிப்பிட்ட கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

EOG 02-0141

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.